**ஊவாபரணகம பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 17 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ஊவாபரணகம பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக்கூற்றுக்களில் ரூபா ரூபா 30,939,413 பெறுமதியான காணி மற்றும் கட்டடங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலத்திற்கு தளம்இடும் கல்லுக்கான இருப்புப் பதிவேட்டில் ரூபா 5,470,180 பெறுமதியர்க நிதிக்கூற்றுக்களில காணப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூலமான அறிவுறுத்தலின் பிரகாரம் பரிந்துரைகள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 10,800,000 ஆக இருந்தபோதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,681,502 காட்டப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்குவிதி நிதி நிர்வாகம் 114 | சபையினால் 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 340,905 பெறுமதியான முற்பணங்கள் 9 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிக்கவில்லை. | முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | சில ஒப்பந்த வேலைகள் முடிவடைந்திருந்தமையால் அதற்காக வழங்கப்பட்ட முற்பணத்திற்கான பெறுமதிகள் புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு உள்ளுராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதி ஒழுங்கு விதி 571(3) | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 41 எண்ணிக்கையான காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 326,562 தொடர்பாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் தீர்ப்பனவு செயற்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் இவ் காலங்கடந்த வைப்புக்கள் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,356,170 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,487,108 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,719,540 | 2,882,453 | 2,363,420 | 827,215 | 2,519,540 | 2,910,964 | 2,242,372 | 668,592 |
| (ii) | வாடகைகள் | 875,000 | 1,008,535 | 898,054 | 262,983 | 1,289,000 | 1,293,844 | 938,913 | 354,931 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,100,000 | 1,100,000 | 1,176,525 | - | 965,000 | - | - | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,253,000 | 2,733,896 | 2,391,310 | 380,275 | 980,000 | 9,907,318 | 3,254,805 | 6,652,513 |
| | மொத்தம் | 5,947,540 | 7,724,884 | 6,829,309 | 1,470,473 | 4,773,540 | 14,112,126 | 6,436,090 | 7,676,036 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 3 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட கிடைக்க வேண்டிய ஏனைய வருமானம் ரூபா 30,800,713 மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானங்கள் இவ்வருடத்தில் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 7,681,502 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 7,000,000 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | இது சம்மந்தமாக உள்ளுராட்சி ஆணையாளரினூடாக மாகாண சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளன. தற்போது ரூபா 1,500,000 பெறுமதியான வருமானம் கிடைத்துள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | அடுத்த வருடத்தில் தயாரிப்பதற்கு விடய அலுவலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | சுகாதார வசதிகள் இல்லாத மக்களுக்கான அவ் வசதிகள் சேவைகளை வழங்க ஏற்பாடு செய்கின்றோம். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 82 கடைகள் முன்றாம் நபர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும் அதில் 32 கடைகளில் வாடகை ஒப்பந்தம் முடிவடைந்து 01 வருடம் தொடக்கம் 09 வருடங்கள் ஆன போதிலும் அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை. மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 195,069 பெறுமதியான வாடகைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | சரியான காலத்தில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும். | தற்போது 20 கடைகள் சம்மந்தமான ஒப்பந்தம் இற்றைப்படுத்தியுள்ளோம். மற்றும் அத் திகதியில் கிடைக்க வேண்டிய ரூபா 166,047 பெறுமதியான வாடகை அறவிடப்பட்டுள்ளது. மற்றும் கிடைக்க வேண்டிய வாடகை அறவிடப்படவும் கடை ஒப்பந்தம் புதுப்பிக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 3 வருடத்திற்கு அதிகமான காலப்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட ரூபா 19,060,269 பெறுமதியான கடன்கொடுனருக்கு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்ய வேண்டிய கடன் நிலுவையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது ரூபா 4,540,891 பெறுமதியானவை தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

**3.3 வருடாந்த பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடத்திற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்க விடய அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 4 பதவிகள் தொடர்பாக 12 ஆளணியினர் அதிகமாகவும் 2 பதவிகள் தொடர்பாக 2 ஆளணியினர் குறைவாகவும் காணப்படுகின்றது. | பதவிகள் சரியான முறையில் முகாமைட செய்யப்பட வேண்டும். | அதிகமாக உள்ள பதவிக்கு அனுமதி எடுப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறைவாக உள்ள பதவி தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டின் வருடாந்த இருப்பு கணிப்பு சபை அறிக்கையின்படி இருப்பு கணிப்பு சபைக்கு காட்டப்படாத ரூபா 61,614 பெறுமதியான 498 நூலக புத்தகங்கள் குறைவு சம்மந்தமாக நிதி ஒழுங்கு விதிப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | கணக்காய்வு முகாமைத்துவகுழு கூட்டத்தில் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | இவ் வருடத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்திற்கான திகதிகள் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கேட்கப்பட்டுள்ளது. |